RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22230

OPEN ACCESS

# சங்க இலக்கியங்களில் இடம்பெறும் வழிபாட்டு முறைகள்

ஜோ. ஜோதிமணி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பந்தட்டை-621116, தமிழ்நாடு, இந்தியா

# A Liturgy in Sangam Literature

J. Jothimani [a, *]

[a] Department of Tamil, Government. Arts & Science College, Veppanthattai-621116, Tamil Nadu, India

* Corresponding Author: subramani_jagan@yahoo.com

Received: 26.09.2022
Revised: 21-10-2022
Accepted: 30-10-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Worship has been an integral part of our lives since ancient times. Worship is a means of unifying the mind, language, and meaning to pray to the Lord. Since ancient times, people have been living with the belief that there is some power in this world that drives us. They live with the belief that we are driven by the forces of nature that happen around us every day. They worship nature as their gods. We can see that there were worships in ancient times like sun worship because we get light from the sun, Varunana because we get food from rain water, river worship, dragon worship and fire worship. In the Sangam literature also worship of one deity and multiple deities are found. The Deities are prioritized according to the nature of the land where the people live. In the hilly land of Kurinji, people worship lord Murugan as their deity, lord Indra in marutham land, lord Thirumal in mullai land, lord Kotravai in Paalai land and lord Varunan in Neyythal land. Worship of such deities is widespread in Sangam literary works. Along with the worship of these deities, there are reports of worshiping the powers that give fear such as ghosts, goblins and demons as deities in the Sangam literature. Thus, the purpose of this article is to investigate the worship methods in the Sangam literature.

**Keywords:** Worship, Sangam Literature, Deity, Kotravai

## முன்னுரை

பண்டைக்காலம் முதல் இக்காலம் வரை வழிபாடு நம் வாழ்க்கையின் ஒரு கூறாக விளங்குகின்றது. வழிபாடு என்பது மனம், மொழி, மெய் ஆகியவற்றை ஒருநிலைப்படுத்தி இறைவன் வேண்டுதலைக் குறிப்பதாகும். பழங்காலம் முதல் மக்கள் இவ்வுலகில் ஏதோ ஒருசக்தி நம்மை இயக்குகிறது என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் நம்மைச் சுற்றி அன்றாடம் நிகழும் இயற்கைச் சக்திகள் தான் நம்மை இயக்குகின்றன என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து வருகிறார்கள். தங்களுடைய தெய்வங்களாக இயற்கை வழிபாடும், சூரியனால் வெளிச்சம் கிடைப்பதால் சூரிய வழிபாடும், மழை நீரால் நாம் உண்ணும் உணவு கிடைப்பதால் வருணனையும், ஆற்றை வழிபடுகின்ற போக்கும், நாக வழிபாடு, அக்னி வழிபாடு என பண்டைக்காலத்தில் வழிபாடுகள் இருந்துள்ளதை நம்மால் காண முடிகிறது.

சங்க இலக்கியங்களிலும் ஒரு தெய்வ வழிபாடு என்பது அன்றி பல தெய்வ வழிபாடுகள் காணப்பெறுகின்றன. மக்கள் வாழுகின்ற நிலத்தின் இயல்புகளுக்கேற்ப தெய்வங்கள் முதன்மை பெற்றுள்ளன. மலைகளைக் கொண்டுள்ள குறிஞ்சி நிலத்தில் முருகனைத் தெய்வமாகக் கொண்டு வழிபாடுகள் நடத்தப்பெற்றன, வயல்களைக் கொண்ட மருத நிலத்தில் இந்திரனையும், பெருமணல்

உலகம் எனப்படும் நெய்தல் நிலத்தில் வருணனை தெய்வமாகக் கொண்டு வழிபாடுகள் நடத்தப்பெற்றன, காடுகளைக் கொண்ட முல்லை நிலத்திற்கு திருமாலும், பாலை நிலத்திற்குக் கொற்றவையும் காளியும் தெய்வங்களாக விளங்கியதை அறிய முடிகிறது. இத்தகைய தெய்வங்களின் வழிபாடுகள் சங்க இலக்கியத்தில் பரந்து காணப்படுகின்றன. இத்தெய்வ வழிபாடுகளோடு பேய், பூதம், எமன் போன்ற அச்சத்தைத் தருகின்ற சக்திகளையும் தெய்வமெனக் கொண்டு வழிபடும் செய்திகள் சங்க இலக்கியத்தில் காணப்பெறுகின்றன. இவ்வாறு சங்க இலக்கியத்தில் இடம்பெறும் வழிபாட்டு முறைகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நால்வகை நெறிகள்

வழிபாட்டில் நால்வகை நெறிகளை ஆகமங்கள் கூறியுள்ளன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காக வகைப்படுத்தப்பட்டுள்ளன. உயிர்கள் பாசங்களிலிருந்து நீங்கி இறைவனைச் சேர்ந்து பேரின்பம் நுகர்வதற்கு இந்நால்வகை நெறிகள் உதவுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய இந்நால்வகை நெறிகளும் முறையே ஒன்றினது வளர்ச்சி நிலையே மற்றொன்றாதலின் இவை அரும்பு, மலர், காய், கனியோடு ஒப்பிடப்படுகிறது.

## வழிபாட்டின் வகைகள்

இறைவனை வணங்கும்பொழுது தன் நலத்திற்காகவும் பொதுநலத்திற்காகவும் வணங்குவது மனித இயல்பாகும். அதனடிப்படையில் வழிபாட்டினையும் அகம், புறம் என இரண்டாகப் பகுப்பர்.

## அகவழிபாடு (கிரியை)

சிவபெருமானின் திருமேனியைச் சிவலிங்க வடிவில் எழுந்தருளுவித்துக் கொண்டு ஐவகைத் தூய்மைகளையும் செய்து, திருமுழுக்காட்டி ஆடை அணிவித்து நறுமலர்களால் அருச்சித்து நிவேதனம் செய்து, நறும்புகையும் ஒளி விளக்கும் காட்டி எரியோம்பல் செய்தல் அகவழிபாடாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு நெறிகளில் கிரியை என்பது அகவழிப்பாட்டினைக் குறிப்பதாகும்.

## புறவழிபாடு (சரியை)

புறவழிபாடு என்பது உருவநிலையில் இறைவனுக்கு வழிபாடு செய்வதாகும். சரியை என்பதற்குத் தொண்டு என்று பொருள் கூறுவர். தொண்டு செய்வாரைத் தாசர் எனக் குறிப்பிடுவதுண்டு. மார்க்கம் என்பது நெறி. இறைவனை ஆண்டானாகவும் தன்னை அடியவனாகவும் கொண்டு ஒழுகும் நெறி சரியை நெறி அதாவது தாசமார்க்கம் எனப்பட்டது.

## வழிபாட்டு முறை

சிவபெருமான் திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் சிறப்பிடங்களே திருக்கோயில்கள் ஆகும். அத்திருக்கோயில்களில் காணப்படும் குப்பைக் கூளம் முதலிய ஆகாப் பொருட்களை அகற்றிட வேண்டும். அதன் பின்னர் எல்லாவிடத்தும் திருமெழுக்கிட்டுத் தூயதாக்க வேண்டும். ஆங்காங்கே இருள் நீங்கத் திருவிளக்கிட வேண்டும். நந்தவனங்கள் வைத்து பூவெடுத்துப் பெருமான் திருமேனிக்குச் சார்த்த நல்ல பூமாலை புனைந்து தரவேண்டும். எல்லாம் வல்ல சிவபெருமானின் இனிதான புகழினை வாயாரப் பாடி வாழ்த்துதல் வேண்டும். சிவனடியார் திருவேடத்தைக் கண்ணுறும்பொழுதே பெருமானையே உள்ளத்தில் கண்டு உவகைக் கொள்ள வேண்டும்.

அவர் வேண்டும் பணிகளை வினவியறிந்து அவர் அருளிச் செய்யும் அடித்தொண்டினை அயராது செய்தல் வேண்டும். இவ்வாறு செய்வதெல்லாம் சிவபெருமான் உருவத்திருமேனியை நோக்கி

புறத்தொழிலளவில் செய்யும் புறவழிபாடு ஆகும். இவற்றைச் செய்வோர் இதன் பயனாகச் சிவலோகத்தே சேர்ந்திருக்கும் பதமுத்தியைப் பெறுவர் என சமய நூல்கள் பலவும் சுட்டியுள்ளன.

## சிவ வழிபாடு

மனித குலத்தின் சிந்தனையில் முழுநிறைவானதும், மூதறிவார்ந்ததுமாகப் பெரிதும் போற்றத்தக்கதாக விளங்குவது சைவ சித்தாந்தமாகும். சைவம் என்ற சொல் சிவன் சொல்லோடு தொடர்புடையது. சிவம் என்ற சொல் எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை என்றும், எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு என்றும் பொருள்படும். எல்லாப் பொருள்களையும் கடந்த நிலையிலும் எல்லாப் பொருள்களிலும் ஊடுருவியும் நிற்கும் பரம்பொருள் சிவன். அப்பரம்பொருளோடு தொடர்பு கொள்ள எடுத்துக்கொண்ட திருக்கோலங்கள் பல. அத்திருக்கோலங்களில் உள்ள பரம்பொருளைக் குறிக்க சிவன் சொல் வழங்கப்படுகிறது. சிவம் என்ற சொல் நன்மை, மங்கலம், முக்தி என்ற பொருளை உடையது.

சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள தெய்வ வழிபாடுகளுக்குள் தலைமையானது சிவ வழிபாடு ஆகும். சிவன் என்ற சொல்லால் சங்க இலக்கியத்தில் குறிக்கப் பெறாமல் ஆதிரையான், ஆலமர்செல்வன், ஆனேற்றுக் கொடியான், ஈசன், ஈர்ஞ்சடை அந்தணன், காலக்கடவுள், தாழ்சடைப் பெரியோன், மணிமிடற்றனன், முக்கட் செல்வன் என்ற பெயர்களால் அழைக்கப்பெறுகிறான். சிவ வழிபாடு பரந்து விரிந்து ஆலமர நிழலில் நிகழ்ந்தது.

“ஆலமர் செல்வன் அணிசால் பெருவரல்" (Puliyur Kesigan, 2012)

"ஆலமர் கடவுளன்ன நின் செல்வம்" (Duraisamipillai, 2007)

என்ற பாடல்வரிகள் குறிப்பிடுகின்றன.

மேலும், நீலக் கழுத்தை (மணிமிடறு) உடையவன் என்பது பிற உயிர்களைக் காக்கும் பொருட்டால் பெற்ற அறிகுறியாகும் அதனால் சிவன்,

"காரி உண்டிக் கடவுள்" (Nagarasan, 2014)

என்று பெயர் பெறுகிறான். அவனை வழிபடுவதால் நன்மை உண்டாக்கும் என்று சங்க நூல்கள் கூறுகின்றது.

தெளிந்த நீர் உடைய கங்கையின் கொடிய வேகத்தை ஒடுக்குவதற்காக நின் சடையிலே அதனை ஏந்தி அடக்கிக் கொண்டவனும், கொடுஞ்செயல்கள் புரிந்த திரிபுரங்களையும் நெருப்பிட்டு நீராக்கி நின்றும், வாக்கிற்கும், மனத்திற்கும் எட்டாதவனாக, அவற்றைக் கடந்து அவற்றிற்கும் மேலாக நிற்கும் நீலமணி போலக் கறை விளங்கும் கழுத்தும், எட்டுக்கரங்களைக் கொண்டு விளங்கும் சிவபெருமானே எனப் போற்றும்விதத்தை,

"தேறு நீர் சடைக் கரந்து, திரிபுரம் தீ மடுத்து

கூறாமல் குறித்ததன் மேல் செல்லும் கடுங்கூளி

மாறாப் போர், மணிமிடற்று எண்கையாய்" (Puliyur Kesigan, 2012)

இப்பாடல் வழி அறியமுடிகிறது.

மேலும் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகண்ணனார் வாழ்த்துங்கால் பகைவர் அரண்களைக் கைப்பற்றி அங்கிருந்து கொள்ளப்பட்ட நல்ல அணிகலன்களைப் பரிசிலர்க்கு நல்கி முனிவர்களால் தொழப்பெறும் முக்கண் படைத்த இறைவனது கோயிலை வலம் வரும் பொருட்டு நின் தலை வணங்குவதாக என சிவனை வழிபடுமாறு அப்புலவர் அம்மன்னனுக்கு வலியுறுத்துவதை,

"முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே

இறைஞ்சுக பெருமநின் சென்னி" (Duraisamipillai, 2007)

இப்பாடல் வழி அறிய முடிகிறது.

வானிடத்தில் பறந்த திரியும் இயல்புடைய பொன், வெள்ளி, இரும்பு மதில்களைக் கொண்ட நகரங்கள் மூன்றில் வாழ்ந்த அரக்கர்களை சிவபெருமான் தன் சிரிப்பினால் எரித்தான் என்ற புராண வரலாறும் பரிபாடலில் இடம்பெற்றுள்ளதை,

“மூவகை ஆரெயில் ஓர் அழல் அம்பின் முளிய

மாதிரம் அழல எய்து அமரர் வேள்விப்

பாகம் உண்ட பைங்கண் பார்ப்பான்" (Balasubramaniyan, 2014)

இப்பாடல் உணர்த்துகிறது.

## திருமால் வழிபாடு

திருமாலைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபட்டு வந்த முறை தமிழ் மக்களின் வழக்கங்களில் ஒன்றாகும் திருமாலே எல்லாப் பொருளாகவும், பொருளின் தன்மையாகவும் இருப்பதை,

"தீயினுள் தெறல் நீ, பூவினுள் நாற்றம் நீ

கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ

அறத்தினுள் அன்பு நீ, மறத்தினுள் மைந்து நீ

அனைத்தும் நீ" (Balasubramaniyan, 2014)

இப்பாடல் அழகாக எடுத்துக்காட்டுகிறது. அதாவது சுடும் தீயில் வெப்பமாகவும் மலரில் மணமாகவும் கல்லினுள் மணியாகவும், சொல்லில் வாய்மையாகவும் அறத்தினுள் அன்பாகவும் இன்னும் சொல்லப்படாத எல்லாம் பொருளாகவும் பொருளின் உட்பொருளாகவும் திருமால் உள்ளதை இப்பாடல் அழகாக எடுத்துக்காட்டுகிறது. மேலும், சங்க இலக்கியங்களில் திருமாலை விண்ணவன், நெடியோன், நெடுமுடி அண்ணல் முதலிய பெயர்களால் அழைக்கப்படுகின்றார். தொல்காப்பியர் திருமாலை மாயோன் எனவும் அவருக்கு உரிமையான முல்லை நிலத்தை காடுறை உலகம் என்றும் குறிக்கின்றார். இதனை, ‘மாயோன் மேய காடுறை உலகமும்’ என்னும் நூற்பாவால் அறிய முடிகிறது.

திருமால் நீல நிறத்தை உடையவர். அந்நிறத்திற்குக் கடலின் நீல நிறமும், மயிலின் புறக்கழுத்தும் உவமைகளாகக் கூறப்படுகின்றன. திருமால் தன்னுடைய ஒரு கையில் பகைவரை வருத்தும் ஆழிப்படையையும் மற்றொரு கையில் சங்கையும் தரித்திருக்கின்றார். அவருக்கு கருடன் கொடியாகவும், ஊர்தியாகவும் உள்ளான். ஆயிரம் தலைகளை உடைய அரவணையின் மீது அவர் துயில் கொண்டுள்ளார் என்பதை,

"எரி திரிந்தன்ன பொன்புனை உடுக்கையை

சேவல் அம் கொடியோய்"

மேலும் நீர்வளம் பொருந்திய யமுனை ஆற்றில் மணலை உடைய அகன்ற துறையில் நீராடிய ஆயர் மகளிர் குளிர்ந்த தழையை உடுத்திக்கொள்ள குருத்த மரம் வளையும்படி மிதித்துத் தந்தான் கண்ணன் என்று கிருஷ்ண அவதாரச் செயலை அகநானூற்றுப் பாடல் தெளிவுப்படுத்துவதை,

“வண்புனல் தொழுநை வார் மணல்

அகன்துறை

அண்டர் மகளிர் தண்கழை உழலியர்

மரம் செல மிதித்த மாஅல் போல”

இப்பாடல் மூலம் அறியலாம். இவ்வாறு திருமால் வழிபாடு சங்க காலத்தில் சிறப்புடன் விளங்கி மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்ததை அறிய முடிகிறது. கொற்றவை வழிபாடு

சங்க காலத்தில் கொற்றவையை போர்த்தெய்வமாகக் கருதி வழிபட்டனர். தொல்காப்பியரும் கொற்றவையை நிலத் தெய்வமாகக் குறிப்பிடவில்லை. அவளை போர்த்தெய்வமாக குறிப்பிட்டுள்ளதை,

“மறங்கடை கூட்டிய துடிநிலை சிறந்த

கொற்றவை நிலையும் அத்திணைப்புறனே"

இந்நூற்பா மூலம் அறியலாம். மேலும் கொற்றவை வழிபாடு பற்றிய விரிவான விளக்கங்கள் சிலப்பதிகாரத்து வேட்டுவவரியில் சித்தரிக்கப் பெற்றுள்ளாள். எயினர்கள் மறக்குணம் வாய்ந்தவராகவும், அவர்கள் ஆநிரையைக் கவர்ந்து வர கொற்றவையை வழிபட்டதாக கருத்துகள் புலப்படுகின்றன. மேலும் கொற்றவையின் பெயர்களாக அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, சங்கரி, ஐயை, காளி, அந்தரி எனக் கூறி சிலப்பதிகாரத்தில் போற்றப்படுகிறது.

“மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி

நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்

பவள வாய்ச்சி வௌவாள் நகைச்சி

அரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்"

அதாவது பிறையாகிய வெள்ளிய இதழைச் சூடும் சென்னியல நெற்றியைத் திறந்து விழித்த இமையாத கண்ணினள். பவளம் போன்ற வாயை உடையவள். நஞ்சு உண்டதால் கறுத்த கண்டமுடையவள் என்றெல்லாம் கொற்றவையின் தோற்றம் குறித்து வேட்டுவரி அழகாக எடுத்துக்காட்டுகிறது. எனவே, கொற்றவை சங்ககாலத்தில் போர்த்தெய்வமாகவும், தாய்த்தெய்வமாகவும் போற்றப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

## முருகன் வழிபாடு

சங்ககாலம் முதலே முருகன் பற்றிய செய்திகள் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. தமிழில் கிடைத்த முதல் இலக்கண நூலாக விளங்கும் தொல்காப்பியம் முருகனைச் ‘சேயோன்’ என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளது. இதனையே சங்க இலக்கியங்களில் முருகனை குறித்து வழங்கும் பெயர்கள் சேலுங் கொடியோன், சேய், முதிர்கடவுள், நெடுவேள், தெய்வம், முருகு, அணங்கு, கடவுள், மலைவான், விறள்வேல், மலைஉறைக் கடவுள் என சுட்டப்பெருகின்றன.

முருகப்பெருமான் சிவபெருமானும், கொற்றவையும் படைத்தளித்த குழவி முருகன் எனத் திருமுருகாற்றுப்படை கூறியுள்ளதை,

"அறுவர் பயந்த ஆலமர் செல்வ

ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை

மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே

வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ

இதை அணி சிறப்பின் பழையோள் குழவி"

இப்பாடல் வழி அறியமுடிகிறது. தொடக்கத்தில் முருகன் குன்று சார்ந்த ஒரு இனக்குழு மக்களின் நம்பிக்கைக்குரிய வழிபடு தெய்வமாக இருந்திருக்கிறான். பின்னர் படிப்படியாக வழிப்பாட்டு நிலையில் முன்னுரிமைப் பெற்று விளங்கினான் என்று அறிய முடிகிறது. மேலும், பண்டைத் தமிழர்கள் மரத்தின்கண் தெய்வம் உறைகின்றது என்ற நம்பிக்கை உடையவராக இருந்துள்ளனர்.

“மன்ற மரா அத்த பேஎமுதிர்க் கடவுள்"

என்ற பாடலில் முருகப் பெருமா கடம்ப மரத்தின் கண் உறையும் செய்தியை அறிய முடிகிறது.

மேலும், தலைவி தலைவன் பிரிவால் உடல் மெலிவுறுவாள் ஆனால் அக்கால மக்கள் தலைமகளின் உடல் மெலிவுற்றமை தெய்வத்தால் நிகழ்ந்தது என எண்ணி உறவினர் முருகவேலுக்கு வெறியாட்டு நிகழ்த்திய செய்தி பல பாடல்களில் பதிவு செய்துள்ளனர்.

"சேய் மலைநாடன் செய்த நோயே""

"முருகு அயர்ந்து வந்த முதுவாய் வேல"

என்ற பாடல் வரிகள் முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்தியதை எடுத்துக்காட்டுகின்றன. வானத்தை முட்டுகின்ற உயர்ந்த பெரிய மலைகளிலே இருக்கின்ற குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன் தமிழோடும் தமிழர் வாழ்வோடும் ஒன்றிவிட்டது சங்க காலத்திலேயே முருகனுக்கு தனி இலக்கியமாக பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை தோன்றியதன் சிறப்பை அறிய முடிகிறது.

## முடிவுரை

ஆரியர்கள் தமிழ்நாட்டில் புகுவதற்கு முன்னர் மிகத் தொன்மையான சைவ சமய தெய்வ வழிபாடு தமிழக மக்களால் மேற்கொள்ளப்பட்டிருந்ததை அறிய முடிகிறது. இறைவனை வணங்கும் பொழுது தன்நலத்திற்காகவும், பொதுநலத்திற்காகவும் வணங்குவது மனித இயல்பாகும். அதன் அடிப்படையில் வழிபாட்டினை அகம், புறம் எனப் பகுக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள தெய்வ வழிபாடுகளுக்குள் தலைமையானது சிவ வழிபாடு என்றும், அக்கடவுளை வணங்கும் முறையினையும் சிறப்பினையும் சங்க இலக்கியங்கள் போற்றும் விதத்தை அறியமுடிகிறது. திருமாலைப் பரம்பொருளாகக் கொண்டு எல்லாப் பொருளாகவும், பொருளின் உட்பொருளாகவும் மக்கள் வழிபட்டதையும், சங்ககாலத்தில் கொற்றவையை போர்த்தெய்வமாகவும், தாய்த்தெய்வமாகவும் போற்றப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. சங்க காலத்தில் முருகன் தமிழரின் முதல் தெய்வமாகவும் வீரப்பண்பு மிக்க தெய்வமாகவும் காதல் தெய்வமாகவும் வழிபட்டதை அறியமுடிகிறது.

## References

Balasubramaniyan, K.V. (2014) Paripadal Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Duraisamipillai, A.S. (2007) Purananuru Moolamum Uraiyum, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Nagarasan, V. (2014) Sanga Ilakiyam Pathupattu, New Century Book House, Chennai, India

Puliyur Kesigan, (2012) Kalithogai Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License